# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,368 — 1938 ம் ஷு வைகாசிமீ 11 ந் திகதி, புதன்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன
கட்டளைச் சட்டம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின்படி மட்டக்களப்புப் பகுதி வித்தியாபரிபாலன சபையால் அமைக்கப்பட்டு, வித்தியா சங்கத்தின் அங்கீகாரம்பெற்று, குறித்த பிரிவின்படியும் அதிகாரமந்திர சபையின் 1931 ம் சட்டத்தின் 93 ம் பிரிவின்படியும் கொடுத்த அதிகாரத்தைக்கொண்டு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதி.

உத்தமனுர் கட்டளைப்படி,
சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர,
கல்வி மந்திரி.

கல்வி மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1938 ம் ஆண்டு வைகாசிமீ 6 ந் உ.

உபவிதி.

1928 ம் ஆண்டு மார்கழி மாசம் 14 ந் திகதியன்று 7,679 ம் இலக்க "கெசெற்" பத்திரிகையில் விளம்பரஞ்செய்யப்பட்ட 1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச்சட்டத்தின் 25 ம் பிரிவுக்கமைவான உபவிதிகளும், 1930 ம் ஆண்டு புரட்டாசிமீ 19 ந் திகதியன்று 7,806 ம் இலக்க "கெசற்" பத்திரிகையில் வெளியான குறித்த திருத்தப்பட்ட உபவிதியும் இன்னும் திருத்தத்தைப்பெற்று 5 வது உபவிதிக்குப் பதிலாக பின்வரும் புதிய உபவிதியைக் கொள்கின்றது :—

"5. பாடசாலைக்குப்போகவேண்டிய பிள்ளைகள்.—மட்டக்களப்புப் பகுதியிலுள்ள (a) 6 வயசுக்குக் குறையாததும் 14 வயசுக்குக் கூடாததுமான ஒவ்வொரு சிறுவனின் பெற்ரேரும் (b) 6 வயசுக்குக் குறையாததும் 10 வயசுக்குக் கூடாததுமான ஒவ்வொரு சிறுமியின் பெற்ரேரும் அச்சிறுவன் சிறுமியின் கல்விக்காகப் போதியதும் தகுந்ததுமான வேறு ஒழுங்குகள் செய்திருந்தாலொழிய அல்லது பாடசாலைக்குப் போகாதிருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தாலொழிய அச்சிறுவனை அல்லது சிறுமியைப் பாடசாலைக்குப் போகச் செய்யவேண்டும்.

பின்வரும் பிள்ளைகள் பாடசாலைக்குப் போகவேண்டுமென்ற கட்டாயமில்லை :—(a) ஓர் சிறுமி புறம்பாக ஓர் பெண் ஆசிரியை இல்லாத பாடசாலைக்குப் போதல் (b) தனது, வீடு அல்லது இருப்பிடத்திலிருந்து பாடசாலைக்குக் கிட்டடியுள்ள வழி 1 மைலுக்கு மேற்பட்டால் 8 வயசுக்குக்கீழ்பட்ட ஒரு சிறுவன் அல்லது சிறுமி அல்லது 2 மைலுக்கு மேற்பட்டால் 8 வயசுக்கு மேற்பட்ட சிறுவன் அல்லது சிறுமி (c) மட்டக்களப்பு வித்தியாபரிபாலன சபைத்தலைவரின் திருப்திக்குப் பிரயோசனமான தொழில் செய்தும் சுவபாஷா பாடசாலைகளுக்குரிய ஒழுங்குச் சட்டத்தில் விதிக்கப்பட்ட ஐந்தாவது வகுப்புப் பரீட்சையில் சித்திபெற்றதாக வித்தியாதரிசியிடம் ஒரு சாட்சிப்பத்திரம் பெற்றும், அல்லது வறுமை என்ற காரணத்தைக்கொண்டு வித்தியாபரிபாலன சங்கம் விசேஷ அனுமதி கொடுத்தால் ஒழுங்குச்சட்டப்படி மூன்ருவது வகுப்பில் சித்தியடைந்திருக்கும் 10 வயசுக்கும் 14 வயசுக்குமிடயில்லுள்ள ஓர் பிள்ளை."

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மருதானை புதுத் தபால் கந்தோரிலிருந்தும் ரெலிபோன் எக்ஸ்சேஞ்சிலிருந்தும் கற்கூசுப்பயிப் வைப்பதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 847. குறிச்சி—மருதானை.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| 1 | இறைவரி இலக்கம் 834 கொண்ட ஆதனத்தின் பகுதி (மருதானை ரோட்டு) | ஒட்டால் வேய்ந்த கட்டடம், தனிசைபண்ணிய தரையின் பகுதியும், கட்டட எல்லைச் சுவர்களின் பகுதியுமுள்ளது | கே. ஜயவார்தன, 52, உவாட் பிளேஸ், கொழும்பு—அற்றேணி மெசேர்ஸ் ஜூலியஸ் அன்டு கிறீசி | 0 | 0 | 2·85 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

123——J. N. 74624—114 (5/38)
T 1

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனி மாசம் 22 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1938 ம் ஸ்ரீ (மே) வைகாசிமீ 9 ந் வ.

டபிள்யு. ஏ. ஹொப்டே,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வற்றுவவில் ஓர் அரசினர் பராமரிப்புபாடசாலை ஸ்தாபித்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 570. குறிச்சி—வற்றுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வெலிவத்தை .. | தென்னந்தோட்டம், 50 வயதுள்ள 18 தென்னையும், 2 பலாவும், 30 வயதுள்ள 3 பலாவும், 3 டெல்மரமும், ஒரு மாமரமும், 20 வயதுள்ள ஒரு கித்துள்மரமும், ஒரு ஜம்புமரமும், 15 வயதுள்ள 22 கமுகுவும், 5 வயதுள்ள 2 மாவும், 2 ஜம்புமரமும், 2 எலுமிச்சையும், 2 நாறன்மரமும், 2 விறனுமரமும், 3 வயதுள்ள 2 டொம்பாமரமும் உண்டு | டங்கெதறகுடி டபிள்யு. தேகிரிஸ் டீ. சில்வா | பீ. 0 2 3·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனி மாசம் 14 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல்அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1938 ம் ஸ்ரீ (மே) வைகாசிமீ 5 ந் வ.

ஏ. சீ. எம். ஹீங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு றேட்டுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச சால்லப்படும் காணியை, அஃதாவது :—

1 ம் அனுபந்தம் F. V. பிரதமபடத்து இல. 1,005. குறிச்சி—வடமேன் மாகாணத்தில் குருனுக்கல் டிஸ்திறிக்கில் கட்டுகம்பொளஹற்பத்துவில் கட்டுகம்பொள கோறளை தெற்கில் உள்ள தல்கஹபெத்த கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 191 | பத்தினியாகொட்டுவதோட்டம் .. | 4 தென்னமரமுள்ளகரத்தைபாதை .. | கொழும்பு, கொள்ளுப்பிட்டி அல்பட் றேட், 70 ம் நம்பரிலிருக்கும் மிஸ்ரர் வை. கிறிஸ்தியன் | 0 1 24·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துகொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சளுதிகார ஆட்சி மந்திரோலாசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனி மாசம் 15 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு குருனுக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருனுக்கல் கச்சேரி,
1938 ம் ஸ்ரீ (மே) வைகாசிமீ 5 ந் வ.

ஆர். எச். டீ. மெண்டேர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருனுக்கல் டிஸ்திறிக்.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.